அகத்திணையியலில் விளக்கப்பட்டுள்ளன.

**அகப்பொருளில் ஏழுதிணை**

1. **மலர்தலை உலகத்துப் புலவோர் ஆய்ந்த**
**அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை**
**பெருந்திணை எனஎழு பெற்றித்து ஆகும்.**

பரந்தகன்ற தமிழ்கூறு நல்லுலகின் ஆற்றல் மிக்க புலவர்கள் அகப்பொருளைக் கைக்கிளை (1), ஐந்திணை (5), பெருந்திணை (1) என ஏழுவகையாகப் பாகுபாடு செய்வர்

**அகத்திணை**

**ஐந்திணை**

**கைக்கிளை** 1 | **குறிஞ்சி** 2 | **பாலை** 3 | **முல்லை** 4 | **மருதம்** 5 | **நெய்தல்** 6 | **பெருந்திணை** 7

இப்பாகுபாடு தொல்காப்பியத்தை அடியொற்றிச் செய்யப்பட்டது என்பதைப் பின்வரும் நூற்பாவால் அறியலாம்.

**கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப** **(தொல்.பொருள். 1)**

முன்னோர் நூலைப் பொன்னே போல் போற்றி இந்நூல்

## அகப்பொருளைக் கூறும் திறன்

**2. அதுவே.**
**புனைந்துரை உலகியல் எனுந்திறம் இரண்டினும்**
**தொல்லியல் வழாமல் சொல்லப் படுமே.**

மேலே கூறப்பட்டுள்ள எழுவகையான அகப்பொருள் கூறுகளும் புனைந்துரை, உலகியல் என்னும் முறையில் பழைய மரபு மீறாமல் சொல்லப்படும்.

**புனைந்துரை**

உலகில் நிழ்ந்திராத ஆனால் நிகழ்வதற்கு வாய்புள்ள ஒரு நிகழ்வினைக் கற்பனையாகப் படைத்துக் கூறுவது புனைந்துரையாகும்.

**உலகியல்**

வாழ்க்கையில் நடக்கக் கூடியவற்றை இலக்கியமாகப் படைத்துத் தருதல் உலகியலாகும்.

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்** **(தொல். பொருள். 56)**

எனத் தொல்காப்பியர் கூறுவதும் நினைவு கூரத்தக்கதாகும்.

(2)

## கைக்கிளை

**3. அவற்றுள்,**
**கைக்கிளை உடையது ஒருதலைக் காமம்.**

அகத்திணை ஏழனுள் முதலில் வரும் கைக்கிளை என்பது ஒருதலைக் காமமாகும்.

ஐந்திணை ஒழுக்கத்திற்குத் தொடக்கமாக அமைவது கைக்கிளையாகும். கை - சிறுமை, கிளை - உறவு, சிறுமையாகிய உறவு எனப் பொருள்படும். தலைவியைக் கண்டு ஐயுற்ற தலைவன் தெளிந்து அவளோடு களவு வாழ்க்கையைத் தொடங்குவான். எனவே கைக்கிளையில் தொடங்கிக் களவில் வளர்ந்து கற்பில் நிறைவுறும். அன்பின் ஐந்திணைக்கு அடிப்படை கைக்கிளை ஆகும்.

பெரும்பாலும் ஆடவரிடம் மட்டுமே தோன்றுவது கைக்கிளைக் காமம். தலைவி தலைவனை விரும்புவது போன்ற ஒருதலைக் காமமும் அருகிய வழக்கில் உள்ளது. இதனால் பிற்காலத்து ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை எனக் கைக்கிளை இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது.

## ஐந்திணை

**4. ஐந்திணை உடையது அன்புடைக் காமம்.**

ஐந்திணை என்பது தலைவன், தலைவியின் அன்பு நிறைந்த காதலைக் கூறுவதாகும். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐவகை நிலங்களிலும் தலைவன், தலைவியின் அன்புடைக்காமம் வெளிப்படும்.

(4)

## பெருந்திணை

**5. பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்.**

பெருந்திணை என்பது பொருந்தாமல் வரக்கூடிய காதலாகும். உள்ளன்பு இல்லாதவரை விரும்புவது பெருந்திணையாகும்.

> **கொடிய குட்ட நோயானது பெருநோய் எனவும் கொடிய வெடி கட்டி நோய் பெருவாரி நோய் எனவும் வழங்குதல் போல, கொடிய முரட்டுத் தனமான மடலேறுதல் முதலிய தகா ஒழுக்கத்தையுடைய திணை பெருத்திணை எனப்பட்டது (குழ.1)**

எனப் பெருந்திணைக்குக் கூறப்படும் விளக்கமும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

(5)

## ஐந்திணைகளின் பெயர்கள்

**6. குறிஞ்சி பாலை முல்லை மருதம்**
**நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே.**

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்தும் ஐந்திணைக்குரிய பெயர்களாகும்.

கைக்கிளையும் பெருந்திணையும் எல்லா நிலத்தும் நிகழுமாதலால் அவற்றுக்கென்று தனி நிலம் வகுக்கப்படவில்லை. மிகுதி நோக்கி ஐந்திணைக்கு நிலம் வகுக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் பின்வரும் நூற்பாவில் நால்வகை நிலங்களையும் அவற்றின் தெய்வங்களையும் குறிப்பிடுகின்றார்.

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே** *(தொல்.பொருள்.5)*

7. அவைதாம்,
முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் எனமுறை
நுதற்பொருள் மூன்றினும் நுவலப் படுமே.

மேற்குறிக்கப் பெற்ற குறிஞ்சி முதலாகிய ஐவகை நிலங்களுக்குப் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப் பொருட்கள் மூன்று வகையில் அமையும்.

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுள் பயின்றவை நாடுங்காலை

(தொல்.பொருள்.3)

எனத் தொல்காப்பியரும் குறிப்பிடுகின்றார்.

| 1. முதற்பொருள் | 2. கருப்பொருள் | 3. உரிப்பொருள் |
|---|---|---|
| நிலமும் பொழுதும் | வாழும் மக்களும் உயிரினங்களும் பிற யாவும் | புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும் இரங்கலும் இவற்றின் நிமித்தமும் |

(7)

**1. முதற்பொருளின் வகை**

8. நிலமும் பொழுதுமென முதல்இரு வகைத்தே.

உயிரினங்கள் வாழ அடிப்படையாக அமையும் நிலமும் இயங்கும் பொழுதாகிய காலமும் முதற்பொருள் எனப்படும்.

**முதலெனப் படுவது நிலம்பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே**

**(தொல்.பொருள்.47)**

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

(8)

## நிலமாகிய முதற்பொருளின் வகை

9. வரையே சுரமே புறவே பழனம்
திரையே அவையவை சேர்தரும் இடனே
எனாஅர் ஐவகைத்து அனையியல் நிலமே.

வரை எனப்படும் மலையும் சுரம் எனப்படும் வறண்ட நிலமும் புறவு எனப்படும் காடும் பழனம் எனப்படும் வயலும் திரை எனப்படும் கடலும் அவை சார்ந்த இடமும் என முதற் பொருள்களுள் ஒன்றாகிய நிலம் பத்து வகையில் அடங்கும்.

| | |
|---|---|
| *1. வரை* : | மலையும் |
| *2.* | மலை சார்ந்த இடமும் - குறிஞ்சி |
| *3. சுரம்* : | வறண்ட நிலமும் |
| *4.* | அது சார்ந்த இடமும் - பாலை |
| *5. புறவு* : | காடும் |
| *6.* | காடு சார்ந்த இடமும் - முல்லை |
| *7. பழனம்* : | வயலும் |
| *8.* | வயல் சார்ந்த இடமும் - மருதம் |
| *9. திரை* : | கடலும் |
| *10.* | கடல் சார்ந்த இடமும் - நெய்தல் |

இவ்வாறு ஐவகை நிலமும் அவை சார்ந்த இடமும் பத்து வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன.

(9)

**காலமாகிய முதற்பொருளின் வகை**

10. பெரும்பொழுது என்றா சிறுபொழுது என்றா
இரண்டு கூற்றது இயம்பிய பொழுது.

மேற் சொல்லப்பட்ட பொழுது என்பது ஆண்டைக் கணக்கிடும் போது **பெரும்பொழுது** என்றும் நாளைக் கணக்கிடும் போது **சிறுபொழுது** என்றும் இருவகையில் அமையும். (10)

**பெரும்பொழுதின் வகை**

11. காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனில் என்றாங்கு
இருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே.

கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஓர் ஆண்டாகிய பெரும்பொழுதை ஆறுவகையாகப் பகுப்பர்.

பெரும்பொழுதின் ஒவ்வொரு வகைக்கும் ஆண்டின் பன்னிரண்டு மாதங்களும் இரண்டிரண்டாகக் கணக்கிடப்படும்.

| | | |
|---|---|---|
| 1. கார் காலம் | : | ஆவணி, புரட்டாசி |
| 2. கூதிர் காலம் | : | ஐப்பசி, கார்த்திகை |
| 3. முன்பனிக் காலம் | : | மார்கழி, தை |
| 4. பின்பனிக் காலம் | : | மாசி, பங்குனி |
| 5. இளவேனிற் காலம் | : | சித்திரை, வைகாசி |
| 6. முதுவேனிற் காலம் | : | ஆனி, ஆடி |

(11)

**சிறுபொழுதின் வகை**

12. மாலை யாமம் வைகறை எற்படு
காலை வெங்கதிர் காயும்நண் பகலெனக்
கைவகைச் சிறுபொழுது ஐவகைத் தாகும்.

மாலை, யாமம் (நடுயாமம்), வைகறை, எற்படுகாலை, நண்பகல் என ஒரு நாள் ஐந்து சிறுபொழுதுகளாகக் கணக்கிடப் படும்.

ஒரு நாளின் 60 நாழிகைகளுள் ஒவ்வொரு சிறுபொழுதும் 10 நாழிகை அளவு பெறும். இச்சிறு பொழுதுகள் ஞாயிறு மறையத் தொடங்கிய நேரம் தொட்டு மறுநாள் ஞாயிறு தோன்றி மறையும் மாலை வரை நேரம் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| மாலை | : | பிற்பகல் 2 மணி முதல் இரவு 10 மணி வரை |
| யாமம் | : | இரவு 10 மணி முதல் 2 மணி வரை |
| வைகறை | : | இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை |
| எற்பாடு காலை | : | காலை 6 மணி முதல் முற்பகல் 10 மணி வரை |
| நண்பகல் | : | நண்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை |

(இல.விள.385)

(12)

## குறிஞ்சியின் பெரும்பொழுது – சிறுபொழுது

13. அவற்றுள்,

**கூதிர் யாமம் முன்பனி என்றிவை**

**ஓதிய குறிஞ்சிக்கு உரிய ஆகும்.**

**கூதிர், முன்பனி** என்னும் பெரும்பொழுதும் **யாமம்** என்னும் சிறுபொழுதும் குறிஞ்சி நிலத்திற்கு உரியவையாகும்.

கூதிர், முன்பனி எனப் பெரும்பொழுதை வரிசைப்படுத்தாது சிறுபொழுதாகிய யாமத்திற்கு அடுத்து முன்பனி வைக்கப்பட்டுள்ளது. கூதிர் காலம் போல முன்பனிக்காலம் குறிஞ்சிக்கு அவ்வளவு சிறப்புடையதன்று என்பதால் இவ்வாறு முறை மாற்றி வைக்கப்பட்டுள்ளதாக உரையாசிரியர் குறிப்பர். மாறி வரும் எல்லாவற்றுக்கும் இக்கருத்துப் பொருந்தும்.

(13)

## பாலையின் பெரும்பொழுது – சிறுபொழுது

14. **வேனில் நண்பகல் பின்பனி என்றிவை**

**பான்மையின் உரிய பாலை தனக்கே.**

**வேனில், பின்பனி** என்னும் பெரும்பொழுதும் **நண்பகல்** என்னும் சிறுபொழுதும் பாலை நிலத்திற்கு உரியவையாகும்.

(14)

## முல்லையின் பெரும்பொழுது – சிறுபொழுது

15. **மல்குகார் மாலை முல்லைக்கு உரிய.**

**கார்காலம்** என்னும் பெரும்பொழுதும் **மாலை** என்னு சிறுபொழுதும் முல்லை நிலத்திற்கு உரியவையாகும்.

**காரும் மாலையும் முல்லை** **(தொல்.பொருள்-**

எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

(1

## மருதத்தின் சிறுபொழுது

16. **இருள்புலர் காலை மருதத்திற்கு உரித்தே.**

இருள் விலகும் **விடியல்** எனப்படும் காலை நேரம் மருதத்திற்கு சிறுபொழுதாகும்.

**வைகறை விடியல் மருதம்** **(தொல்.பொரு**

எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

**நெய்தலின் சிறுபொழுது**

17. வெய்யோன் பாடு நெய்தற்கு உரித்தே.

சூரியன் உதிக்கின்ற **ஏற்படுகாலை** என்பது நெய்தல் நிலத்திற்குரிய சிறுபொழுதாகும். (17)

**மருதம், நெய்தலின் பெரும்பொழுதுகள்**

18. மருதம் நெய்தலென்று இவையிரண் டற்கும்
உரிய பெரும்பொழுது இருமூன் றும்மே.

மருதம், நெய்தல் என்னும் இரு நிலங்களுக்கும் கார், கூதிர் முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் ஆறு பெரும்பொழுதுகளும் உரியவையாகும்.

ஐந்து நிலத்திற்குமுரிய ஆறு பெரும்பொழுதையும் ஐந்து சிறு பொழுதையும் பின்வருமாறு பட்டியலிடலாம்.

| நிலம் | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| 1. குறிஞ்சி | கூதிர், முன்பனி | யாமம் |
| 2. பாலை | வேனில், பின்பனி | நண்பகல் |
| 3. முல்லை | கார் | மாலை |
| 4. மருதம் | கார், கூதிர், முன்பனி,பின்பனி, இளவேனில், முதுவேனில் | வைகறை |
| 5. நெய்தல் | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | எற்படுகாலை |

(18)

## 2. கருப்பொருள்

19. ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள் விலங்கு
ஊர் நீர் பூ மரம் உணா பறை யாழ் பண்
தொழில் எனக் கருஈரேழு வகைத்து ஆகும்.

குறிஞ்சி முதலிய ஐந்திணைகளின் முதற்பொருளாகிய நிலம், பொழுது என்ற இவற்றைச் சார்ந்து அந்தந்த நிலத்து இருப்பவை கருப்பொருள்கள் எனப்படுகின்றன.

1. தெய்வம்
2. உயர்ந்தோர்
3. அல்லோர் (உழைப்போர்)
4. புள்
5. விலங்கு
6. ஊர்
7. நீர்
8. பூ
9. மரம்
10. உணவு
11. பறை
12. யாழ்
13. பண்
14. தொழில்

(19)

20. விறல்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறித்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடாவடி
கறையடி சீயம் சிறுகுடி அருவி
நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்
ஆரம் தேக்குஅகில் அசோகம் நாகம்
வேரல் ஐவனம் தோரை ஏனல்
கறங்கிசைத் தொண்டகம் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரல்
பைந்தினை காத்தல் செந்தேன் அழித்தல்
செழுங்கிழங்கு அகழ்தல் முழங்கிவீழ் அருவியொடு
கொழுஞ்சுனை ஆடல் குறிஞ்சிக் கருப்பொருளே.

| | |
|---|---|
| *1. தெய்வம்* | *சேய் (முருகன்)* |
| *2. உயர்ந்தோர்* | *பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி.* |
| *3. அல்லோர் (உழைப்போர்)* | *குறவர், கானவர், குறத்தியர்.* |
| *4. புள்* | *கிளி, மயில்.* |
| *5. விலங்கு* | *புலி, கரடி, யானை, சிங்கம்.* |
| *6. ஊர்* | *சிறுகுடி.* |
| *7. நீர்* | *அருவி நீர், சுனை நீர்.* |
| *8. பூ* | *வேங்கைப்பூ, குறிஞ்சிப்பூ, காந்தள் பூ.* |
| *9. மரம்* | *சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில்.* |
| *10. உணவு* | *மலை நெல், மூங்கிலரிசி, தினை.* |
| *11. பறை* | *தொண்டகப்பறை.* |
| *12. யாழ்* | *குறிஞ்சி யாழ்.* |
| *13. பண்* | *குறிஞ்சிப் பண்.* |
| *14. தொழில்* | *வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினை காத்தல், தேன் எடுத்தல், கிழங்கு எடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல்.* |

## பாலையின் கருப்பொருள்

21. கன்னி விடலை காளை மீளி
இன்னகை எயிற்றி எயினர் எயிற்றியர்
மறவர் மறத்தியர் புறவுபருந்து எருவை
கழுகு செந்நாய் கல்கெழு குறும்பு
குழிவறுங் கூவல் குராஅ மராஅ
உழிஞ்சில் பாலை ஓமை இருப்பை
வழங்குகதிக் கொண்டன செழும்பதிக் கவர்ந்தன
பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்
பகற்சூறை யாடல் பாலைக்குக்கருப் பொருளே.

| | |
|---|---|
| 1. தெய்வம் | கன்னி (துர்க்கை) |
| 2. உயர்ந்தோர் | விடலை, காளி, மீளி, எயிற்றி. |
| 3. அல்லோர் (உழைப்போர்) | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர். |
| 4. புள் | புறா, பருந்து, எருவை, கழுகு. |
| 5. விலங்கு | செந்நாய். |
| 6. ஊர் | குறும்பு. |
| 7. நீர் | நீரில்லாக் குழி, நீரில்லாக் கிணறு. |
| 8. பூ | குராம்பூ, மராம்பூ. |
| 9. மரம் | உழிஞை, பாலை, ஓமை, இருப்பை. |
| 10. உணவு | வழியில் பறித்த பொருள், ஊரில் கவர்ந்த பொருள். |
| 11. பறை | துடி. |
| 12. யாழ் | பாலை யாழ். |
| 13. பண் | பஞ்சுரம். |
| 14. தொழில் | போர் செய்தல், பகற் சூறையாடல். |

(21)

## முல்லையின் கருப்பொருள்

22 நெடுமால் குறும்பொறை நாடன் தோன்றல்
வடுவில் கற்பின் மனைவி கிழத்தி
இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்
கான வாரணம் மான்முயல் பாடி
குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை

நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவம்
கொன்றை காயா மன்றலங் குருந்தம்
தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை
ஏற்றுப்பறை முல்லை யாழ் சாதாரி
சாமை வரகு தரமுடன் வித்தல்
அவைகளை கட்டல் அரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழல் ஊதல்
மூவினம் மேய்த்தல் சேவினம் தழுவல்
கழுமிய குரவையொடு கான்யாறு என்றிவை
முழுதுடன் ஆடல் முல்லைக் கருப்பொருளே.

| | |
|---|---|
| 1. தெய்வம் | நெடுமால் (திருமால்) |
| 2. உயர்ந்தோர் | குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி. |
| 3. அல்லோர் (உழைப்போர்) | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர். |
| 4. புள் | காட்டுக்கோழி. |
| 5. விலங்கு | மான், முயல். |
| 6. ஊர் | பாடி. |
| 7. நீர் | குறுஞ்சுனை நீர், காட்டாற்று நீர். |
| 8. பூ | குல்லைப்பூ, முல்லைப்பூ, தோன்றிப்பூ, பிடவம்பூ. |
| 9. மரம் | கொன்றை, காயா, குருந்தம். |
| 10. உணவு | வரகு, சாமை, முதிரை. |
| 11. பறை | ஏற்றுப்பறை. |
| 12. யாழ் | முல்லை யாழ். |
| 13. பண் | சாதாரி. |
| 14. தொழில் | சாமை, வரகு விதைத்தல், அவற்றைக்களை கட்டல், அரிதல், கடாவிடுதல் (போரடித்தல்), கொன்றைக் குழலூதுதல், கால்நடை மேய்த்தல், ஏறுதழுவுதல், குரவைக் கூத்தாடல், கான்யாறு ஆடல். |

(22)

மருதத்தின் கருப்பொருள்

23. இந்திரன் ஊரன் பைந்தார் மகிழ்நன்
கெழுதகு கற்பின் கிழத்தி மனைவி
உழவர் உழத்தியர் கடையர் கடைச்சியர்
மழலை வண்டானம் மகன்றில் நாரை

அன்னம் போதா நன்னிறக் கம்புள்
குருகு தாரா எருமை நீர்நாய்
பெருகிய சிறப்பின் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிணறு இலஞ்சி தாமரை
நாறிதழ்க் கழுநீர் நறுமலர்க் குவளை
காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதம்
செந்நெல் வெண்ணெல் அந்நெல் அரிகிணை
மன்றல் முழவம் மருதயாழ் மருதம்
மன்றணி விழாக்கோள் வயற்களை கட்டல்
அரிதல் கடாவிடல் அகன்குளம் குடைதல்
வருபுனல் ஆடல் மருதக் கருப்பொருளே.

| | |
|---|---|
| *1.* தெய்வம் | இந்திரன். |
| *2.* உயர்ந்தோர் | ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி. |
| *3.* அல்லோர் (உழைப்போர்) | உழவன், உழத்தியவர், கடையர், கடைச்சியர். |
| *4.* புள் | வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா. |
| *5.* விலங்கு | எருமை, நீர்நாய். |
| *6.* ஊர் | பேரூர், மூதூர். |
| *7.* நீர் | ஆற்றுநீர், கிணற்றுநீர், குளத்துநீர். |
| *8.* பூ | தாமரைப்பூ, கழுநீர்ப்பூ, குவளைப்பூ. |
| *9.* மரம் | காஞ்சி, வஞ்சி, மருதம். |
| *10.* உணவு | செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி. |
| *11.* பறை | நெல்லரி கிணை, மணமுழவு. |
| *12.* யாழ் | மருத யாழ். |
| *13.* பண் | மருதப்பண். |
| *14.* தொழில் | விழா எடுத்தல், வயற்களை கட்டல், நெல்லரிதல், கடாவிடுதல், குளம் குடைதல், புதுநீராடல். |

## நெய்தலின் கருப்பொருள் (23)

24. வருணன் சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்
பருமம் அல்குல் பரத்தி நுளைச்சி
நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்

அளவர் அளத்தியர் அலைகடல் காக்கை
சுறவம் பாக்கம் பெறலரும் பட்டினம்
உவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டகம் அடம்பு
கண்டல் புன்னை வண்டிமிர் ஞாழல்
புலவு மீன்உப்பு விலைகளில் பெற்றன
நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை
விளரியாழ் செவ்வழி மீன்உப்புப் படுத்தல்
உணங்கலை விற்றல்மீன் உணக்கல்புள் ஓப்பல்
நெடுங்கடல் ஆடல் நெய்தல் கருப்பொருளே.

| | |
|---|---|
| *1.* தெய்வம் | வருணன். |
| *2.* உயர்ந்தோர் | சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளையர். |
| *3.* அல்லோர் (உழைப்போர்) | நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர். |
| *4.* புள் | கடற்காகம். |
| *5.* விலங்கு | சுறாமீன். |
| *6.* ஊர் | பாக்கம், பட்டினம். |
| *7.* நீர் | உவர்நீர்க் கேணி, கவர்நீர். |
| *8.* பூ | நெய்தல்பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடம்பம்பூ. |
| *9.* மரம் | கண்டல், புன்னை, ஞாழல். |
| *10.* உணவு | மீனும் உப்பும் விற்றுப் பெற்ற பொருள். |
| *11.* பறை | மீன்கோட்பறை, நாவாய்ப் பம்பை. |
| *12.* யாழ் | விளரி யாழ். |
| *13.* பண் | செவ்வழிப் பண். |
| *14.* தொழில் | மீன் பிடித்தல், உப்புக் காய்ச்சுதல், உப்பு விற்றல், மீன் உலர்த்தல், கடல் ஆடல் |

(24)

### 3. உரிப்பொருள்

ஒவ்வொரு நிலத்திற்கும் சிறப்பாகவும் குறிப்பாகவும் உரிமையுடைய ஒழுக்கமே உரிப்பொருள் எனப்படும்.

25. புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்
இரங்கலும் இவற்றின் நிமித்தமும் எனவாங்கு
எய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தே.

குறிஞ்சி முதலாகிய ஐவகை நிலங்களுக்கும் புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பனவையும் இவற்றின் நிமித்தமும் என உரிப்பொருள் பத்து வகைப்படும்.

| | | |
|---|---|---|
| 1. புணர்தலும்<br>2. புணர்தல் நிமித்தமும் | - | குறிஞ்சி |
| 3. பிரிதலும்<br>4. பிரிதல் நிமித்தமும் | - | பாலை |
| 5. இருத்தலும்<br>6. இருத்தல் நிமித்தமும் | - | முல்லை |
| 7. ஊடலும்<br>8. ஊடல் நிமித்தமும் | - | மருதம் |
| 9. இரங்கலும்<br>10. இரங்கல் நிமித்தமும் | - | நெய்தல் |

குறிஞ்சி நிலத்தில் சந்தித்துக் கருத்து ஒருமித்த தலைவனும் தலைவியும் கூடி மகிழ்தல் **புணர்தல்** ஆகும். தலைவியை விட்டுத் தலைவன் பிரிந்திருப்பது **பிரிதல்** ஆகும். தலைவன் பிரிந்து சென்றபின் அவனை நினைத்து பொறுத்திருப்பது **இருத்தல்** ஆகும். தலைவன் பரத்தையரிடம் சென்றதால் தலைவி கொள்ளும் மனவேறுபாடு **ஊடல்** ஆகும். தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்தி இருப்பது **இரங்கல்** ஆகும். இவற்றைத் தொல்காப்பியர் பின்வருமாறு தொகுத்துக் கூறுவார்.

**புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே** *(தொல்.பொருள்.16)*

**கைகோள்** (25)

**கை** என்றால் ஒழுக்கம் என்றும் **கோள்** என்றால் கொள்ளுதல் என்றும் பொருள்படும். ஒருவரை ஒருவர் நன்கறிந்தபின் கூடி இன்புற வழிவகை செய்வதாகும்.

26. **அளவில் இன்பத்து ஐந்திணை மருங்கின்**
**களவுகற்பு எனஇரு கைகோள் வழங்கும்.**

**ஒழுக்கத்தைக் கொள்ளும் வகையில் அகப்பொருள் களவு எனவும் கற்பு எனவும் இருநிலைப்பட்ட ஒழுக்கங்களை உடையது** என இந்நூற்பாவுக்கு உரை காணப்படுகிறது. எனவே, கைகோள் என்பது அகவாழ்வில் களவு வாழ்விலும் கற்பு வாழ்விலும் கடைபிடிக்கப்படும் ஒழுக்கமாகும்.

(26)

**கைக்கிளை நிகழும் காலம்**

28. **மெய்க்கிளை யாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்**
**கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப.**

நல்ல கிளை நரம்பினை உடைய யாழினை வைத்திருக்கும் கந்தருவர் கூடி மகிழும் களவுப் புணர்ச்சிக்கு முன்னுள்ள நிலை கைக்கிளை நிகழ் காலமாகும்.

தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டுக் கூடும் கூட்டத்தை வடமொழியில் **கந்தருவ மணம்** என்பர். உரையாசிரியர்கள் கைக்கிளைக்குப் பின் நிகழும் களவொழுக்கத்தைக் கந்தருவ மணத்தோடு ஒப்பிடுவர்.

வடவரின் கந்தருவ மணத்தில் கூடிய தலைவன், தலைவி மணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் கட்டுப்பாடு இல்லை. ஆனால் தமிழரின் களவொழுக்கத்திற்குப்பின் திருமணம் நிகழ்ந்து கற்பு வாழ்க்கையில் ஈடுபடுவர்.

(28)

**கைக்கிளை என்பது**

29. **அதுவே,**
**காமஞ் சான்ற இளமை யோள்வயின்**
**குறிப்பறி காறும் குறுகாது நின்று**
**குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்.**

காம நுகர்வுக்கு ஏற்ற பருவமுடைய தலைவியைக் காணும் தலைவன், அவளின் குறிப்பை அறிவதற்குமுன் தன் நெஞ்சோடு கூறிக் கொள்வதாகும்.

## கைக்கிளைக்குரிய தலைமக்கள் –1

30. மறையோர் மன்னவர் வணிகர்சூத் திரரெனும்
இறையோர் தத்தமக்கு எய்தும் மற்றதுவே.

பார்ப்பனர், அரசர், வணிகர், சூத்திரர் என்னும் நால்வகைப் பிரிவைச் சார்ந்தவர்களும் கைக்கிளைத் தலைமக்கள் என்னும் தகுதியைப் பெறுவர்.

*1. பார்ப்பனர்* *3. வணிகர்*
*2. அரசர்* *4. சூத்திரர்*

(30)

## கைக்கிளைக்குரிய தலைமக்கள் –2

31. அதுவே,
மொழிந்தோர் நால்வரும் ஒழிந்துஐந் நிலத்துஉறை
இழிந்தோர் தம்முள் உயர்ந்தோரும் எய்துப.

மேலே கூறப்பட்ட பார்ப்பனர், அரசர், வணிகர், சூத்திரர் மட்டுமல்லாமல் ஐவகை நிலத்துள்ளும். வாழும் உயர்தோரும் அல்லாதோருள் தலைமக்களாக வாழ்வோரும் கைக்கிளைக் தலைமக்கள் ஆவர்.

(31)

## இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம் –1

***ஊழ் வயத்தால் தலைவன் தலைவியை எதிர்ப்பட அவ்விரு வரும் மனம் இயைந்து தாமே கூடுதல் இயற்கைப் புணர்ச்சி; இது களவினுள் முதற் கிளவி***

***(அக. விள. 123 உரை)***

32. தெய்வம் தன்னில் எய்தவும் கிழத்தியின்
எய்தவும் படூஉம் இயற்கைப் புணர்ச்சி.

தெய்வத்தால் நடைபெறுவது, தலைவியால் நடைபெறுவது என இயற்கைப் புணர்ச்சி இருவகையில் அமையும்.

(32)

## இயற்கைப் புணர்ச்சி இலக்கணம் –2

33. இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தின் எய்துழி
முயற்சி இன்றி முடிவ தாகும்.

இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தான் நடை பெறுவதாயின் அது எவ்விதமான முயற்சியும் இல்லாமல் அமையும்.

எனவே, அப்புணர்ச்சி தலைமகனாற் பெறுங்காலத்து முயற்சியானே முடிவதாகும் என்பதாயிற்று. முயற்சி இன்றி முடிவது விதி. சொல்லிய **நுகர்ச்சி வல்லே பெற்றுழி** (தொல். பொருள். 99:4) என்பதாம்.

(33)

**களவுப் புணர்ச்சி நிகழும் திறம்**

34. **உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும்**
**கள்ளப் புணர்ச்சியுள் காதலர்க்கு உரிய.**

உள்ளப் புணர்ச்சி என்பது மனத்தால் விரும்பி ஒருவர் உள்ளத்தில் மற்றவர் புகுவதாகும். கள்ளப் புணர்ச்சி எனப்படும் களவுப் புணர்ச்சி என்பது மெய் தொட்டு உறவு கொள்வதாகும். இவை இருதிறமும் தலைவன், தலைவி என்னும் இருவர்க்கும் உரியதாகும்.

(34)

**உள்ளப் புணர்ச்சி நிகழும் காலம்**

35. **பொருவு இறந்தோற்குப் பெருமையும் உரனும்**
**நன்னுதற்கு அச்சமும் நாணும் மடனும்**
**மன்னிய குணங்கள் ஆதலின் முன்னம்**
**உள்ளப் புணர்ச்சி உரிய தாகும்.**

சிறப்பு மிக்க தலைவனுக்குப் பெருமையும் அறிவும் இயற்கையாக அமைந்த குணங்களாகும். தலைவிக்கு அச்சமும் நாணும் மடனும் இயற்கையாக அமைந்த குணங்களாகும். எனவே உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என்னும் இரண்டனுள் உள்ளப் புணர்ச்சியே அவர்களுக்குள் முதலில் நிகழும்.

இவற்றைத் தொல்காப்பியர்,

**பெருமையும் உரனும் ஆடூஉ மேன**

எனவும்,

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப** **(தொல்.பொருள்.*7,8*)**

எனவும் தலைவன், தலைவியின் குணங்களைக் குறிப்பிடுகின்றார்.

(35)

**மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம்**

36. **காட்சி முதலாச் சாக்காடு ஈறாக்**
**காட்டிய பத்துங் கைவரும் எனினே**
**மெய்யுறு புணர்ச்சி எய்துதற்கு உரித்தே.**

காட்சி முதலாகச் சாக்காடு ஈறாகச் சொல்லப்பட்ட பத்தும் ஒருங்கே நிகழுமாயின் மெய்யுறு புணர்ச்சி நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும்.

| | |
|---|---|
| 1. காட்சி | தலைவியைத் தனி இடத்துக் காண்பது |
| 2. வேட்கை | தலைவியைப் பெற விரும்பவது |
| 3. உள்ளுதல் | தலைவியை நினைத்துக் கொண்டே இருப்பது |
| 4. மெலிதல் | உடல் மெலிவடைவது |
| 5. ஆக்கம் செப்பல் | மன அழுத்தத்தைப் பிறரிடம் கூறுவது |
| 6. நாணு வரை இறத்தல் | நாணம் கடந்து நடந்து கொள்வது |
| 7. நோக்குவ எல்லாம் அவையே போறல் | எல்லாவற்றையும் தலைவியாகவே பார்ப்பது |
| 8. மறத்தல் | எல்லாவற்றையும் மறப்பது |
| 9. மயக்கம் | மயங்கித் தெளிவில்லாது இருப்பது |
| 10. சாக்காடு | இறந்துபட எண்ணுவது |

தொல்காப்பியர், மேற்குறிக்கப்பெற்ற தலைவன், தலைவியின் பத்துவகை மனநிலைகளில் காட்சி தவிர மற்றையவற்றைப் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

**வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**
**ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்**
**நோக்குவ எல்லாம் அவையே போறல்**
**மறத்தல் மயக்கம் சாக்காடு என்றுஅச்**
**சிறப்புடை மரபின்அவை களவென மொழிப**

**(தொல்.பொருள்.100)**

(36)

## களவொழுக்கத்தில் நிகழும் பிரிவுகள்

39. ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயின் பிரிதலென்று இருவகைத் தாகும்
நிறைதரு காதல் மறையினில் பிரிவே.

களவொழுக்க காலத்தில் பிரிவு என்பது இரண்டு வகையில் நிகழும். **1. ஒருவழித் தணத்தல் 2. வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதல்** என்பனவாகும்.

**1. ஒருவழித் தணத்தல்** என்பது ஓர் ஊருக்குள் அல்லது ஒரு நாட்டிற்குள் தலைவன் பிரிந்து இருத்தலாகும்.

**2. வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்** என்பது திருமணம் குறித்தபின் அதன் பொருட்டுப் பொருள் ஈட்டக் காட்டையும் நாட்டையும் கடந்து தலைவன் செல்வதாகும்.

## ஒருவழித் தணத்தலுக்குப் பருவம்

40. அவற்றுள்,
**ஒருவழித் தணத்தற்குப் பருவம் கூறார்.**

களவொழுக்கத்தில் நிகழும் ஒருவழித் தணத்தற் பிரிவுக்குக் கால வரையறை இல்லை.

இப்பிரிவு நாடு கடந்தோ காடு கடந்தோ செல்லாமல் ஊருக்குள்ளும் நாட்டுக்குள்ளும் நிகழ்வதால் கால அளவு சொல்லப்படவில்லை. தலைவனும் தலைவியும் எப்போது வேண்டுமானாலும் கூடலாம். (40)

## வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்

41. **வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிவோர்
இருதுவின் கண்ணுடைத்து என்மனார் புலவர்.**

**தலைவியுடன் களவியற் பயிலும் தலைவன் அவளை மணத்தற்கு வேண்டும் பரிசப் பொருள் கொடுக்க வேண்டிப் பொருள் ஈட்டி வரத் தலைவியை விட்டு நீங்கி இருதிங்கள் எல்லைக்குள் நாடு இடையிட்டும் காடு இடையிட்டும் செல்லும் பிரிவு.**

என இந்நூற்பாவுக்கு உரை காணப்படுகின்றது.

தலைவனிடம் முன்பே நிறையச் செல்வம் இருந்தபோதும் தன் முயற்சியால் பொருள் ஈட்டித் திருமணத்தை நடத்த வேண்டும் எனக் களவொழுக்கத்தில் பொருள் ஈட்டப் பிரிந்து செல்கிறான். இவ்வாறு பிரிந்திருக்கும் காலவரையறை இரண்டு திங்கள் என்பதைக்

**களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப** **(இறை.கள.32)**

என இறையனார் களவியல் குறிப்பிடுகின்றது.